# நடப்பு நிகழ்வுகள்- ஜூலை 03 - 2017

- கிரேக்கத்திற்கு இந்திய தூதராக ஷர்மா ஜெயின் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே பானா, இத்தாலி, பிலிப்பைன்ஸ், வாஷிங்டன், டிசி, துருக்கி மற்றும் அர்ஜெண்டினா ஆகியவற்றில் இந்திய தூதரங்களில் பணியாற்றியுள்ளார்.

- இந்தியாவில் நவீன Guardian Drone ஆளில்லா விமானங்களை ஏற்றுமதி செய்ய அமெரிக்க அயலுறவுத்துறை உரிமம் வழங்கியுள்ளது. இந்த விமானங்கள் மூலம் இந்திய கடல்பகுதிகளை நன்கு கண்காணிக்க முடியும். சமீபத்தில் மோடி அமெரிக்க அதிபர் டிரம்ப்பை சந்தித்து பேசியதன் விளைவாக இந்த அனுமதி கிடைத்துள்ளது.

- ஜனாதிபதி மாளிகையில் "ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி – ஒரு ராஜதந்திரி (President Pranab Mukherjee – A Statesman)" என்ற புத்தக வெளியீட்டு விழா நடைபெற்றது. பிரதமர் மோடி புத்தகத்தை வெளியிட ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். இந்த புத்தகம் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி புகைப்படங்கள் மற்றும் கட்டுரைகளை வருண் ஜோஷி தொகுத்துள்ளார். The Statesman குழு இந்த புத்தகத்தை வெளியிட்டுள்ளது.

- HSBC நடத்திய கல்வி மதிப்பு என்ற தலைப்பிலான ஆய்வில் "இந்திய பெற்றோர்கள் குழந்தையின் படிப்பு செலவிற்கு (பள்ளி மற்றும் பல்கலைக்கழகத்தின் கட்டணம் புத்தகங்கள் போக்குவரத்து மற்றும் தங்கும் வசதி உள்பட) ரூ12.12 லட்சம் வரையில் செலவு செய்கிறார்கள்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

- ரயில்வே ஊழியர்கள் அணிவதற்காக பிரத்யேக T-சார்ட்டுகளும் பல்வேறு நிறங்களுடைய மேலாடைகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த உடைகளை பிரபல ஆடை வடிவமைப்பாளர் ரீது பேரி வடிவமைத்துள்ளார். இந்த புதிய ஆடைகளையே வரும் அக்டோபர் மாதம் 2-ம் தேதி முதல் இரயில்வே ஊழியர்கள் அணிந்து கொண்டு பணியாற்றுவர்.

- ஜூலை 3 2017 ல் விம்பிள்டன் விளையாட்டுப்போட்டி அறிமுகம் செய்யப்பட்டு 140 வது ஆண்டைத் தொட்டுள்ளது.

- குஜராத்தின் அகமதாபாத் நகரில் ரூ550 கோடி செலவில் புதிதாக கட்டப்பட்டடுள்ள ஆசியாவின் மிகப்பெரிய பல்நோக்கு விளையாட்டு அரங்கம் “டிரான்ஸ்டாடியா அரினா” (Transtadia Arena - Asia’s Biggest Multi-Purpose Stadium),வை பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

- ஒவ்வொரு எம்.பியும் ஒரு கிராமத்தை தத்தெடுத்து மேம்படுத்த வேண்டும் என்று மத்திய அரசு சார்பில் அறிவுறுத்தப்படடது. பிரதமர் மோடி உத்திரபிரதேசத்தில் உள்ள தனது வாரணாசி தொகுதியில் இருக்கும் ஜெய்பூர் எனும் கிராமத்தை தத்து எடுத்தார். பிறகு நாக்பூர் கிராமத்தை தத்தெடுத்துள்ளார். மூன்றாவதாக காக்ராகியா கிராமத்தை தத்தெடுத்துள்ளார். இந்த கிராமத்தை “மல்யுத்த வீரர்களின் கிராமம்” என்று அழைப்பர்.

- 1890 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட எல்லை ஒப்பந்தத்தை இந்தியா மீறியதாக சீனா குற்றம் சாட்டியுள்ளது. 1890 ம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட சீன – பிரிட்டன் ஒப்பந்தத்தின் படி டோங்லாங் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி எனவே சாலை அமைப்பதில் தப்பொன்றுமில்லை என சீனா அறிவித்துள்ளது.

- டோங்லாங் பகுதி சிக்கிம் மாநிலத்தில் இந்தியா சீனா பூட்டான் ஆகிய மூன்று நாடுகளின் எல்லைகள் சந்திக்குமிடத்தில் அமைந்துள்ளது. தற்போது இந்தப் பகுதியின் பெரும்பகுதி இந்தியாவின் கட்டுப்பாட்டிலும் சிறிய அளவிலான பகுதி பூடானின் கட்டுப்பாட்டிலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

- நெகிலிப்பைகளை பயன்படுத்துவதை ஒழித்து சுற்றுச்சூழலுக்கு உகந்த கரிய மறுபயன்பாட்டுப்பைகள் (Organic Re-Usable Bags) பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 3 அன்று சர்வதேச நெகிழிப்பைகள் இல்லாத நாள் அனுசரிக்கப்படுகிறது.